
தெளிவு
ஜனவரி - பெப்ரவரி 2007
4
فَرِيقًا مِّنْهُمْ لَيَكْتُمُونَ الْحَقَّ وَهُمْ يَعْلَمُونَ
இன்னும் அவர்களில் ஒரு பிரிவினர், நிச்சயமாக நன்கு
கொண்டே உண்மையை மறைக்கின்றனர் (2:146)
எனவே வாசகர்களே! நீங்கள்,
مَا أُنْزِلَ إِلَيْكُمْ مِنْ رَبِّكُمْ
(மனிதர்களே!) உங்களுக்காக உங்கள்
இறக்கிவைக்கப்பட்ட (இவ்வேதத்)தைப்

# ஆசிரியர் கருத்து

உலக முழுவதும் அமைதியிழந்து நாலா பக்கமும் அழிவுகளும் உயிரிழப்புகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இவ்வழிவுகளுக்கான காரணம் என்ன என்பதை அல்லாஹ்வின் வேதத்தில் ஆராய்ந்து அறிந்து கொள்ள முற்படாது, தமது மனம் போனவாறெல்லாம் காரணங்களைக் கற்பித்துக் கொண்டு மனிதர்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அல்லாஹ்வின் வேதமோ "அல்லாஹ் தன் அடியார்களுக்கு ஒரு போதும் அநியாயம் செய்வதில்லை; மனிதர்களே தங்களுக்கு தாங்கள் அநியாயம் செய்து கொள்கின்றனர்" எனத் தெளிவாகக் கூறுகின்றது.

மனிதர்களில் பெரும்பான்மையினரோ இதை உணராது, உலகத்தில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறு செய்து, பாவங்களிலும், அனாச்சாரங்களிலும் மூழ்கி அநியாயக்காரர்களாக வாழ்வதன் காரணமாகவே வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும், கடலிலிருந்தும், கரையிலிருந்தும் மேலும் மேலும் அழிவுகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதே வேதனைக்குரிய உண்மையாகும்.

அதே நேரம் உலகத்தில் சாந்தியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தும் கடப்பாடுடைய முஸ்லிம்களோ தங்களுக்குள் பிளவுபட்டு, பல்வேறு பிரிவினர்களாகப் பிரிந்து ஒரே மார்க்கமாகிய இஸ்லாத்தையும் பல கூறுகளாக்கி தமக்குள்ளேயே விரோதிகளாகி ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டிருக்கின்றனர். அதே நேரம் நடை முறை வாழ்க்கையில் தூய இஸ்லாத்தை விட்டும் வெகு தூரம் சென்றுவிட்டனர்.

இதே நிலையில் எல்லாப் பிரிவுகளையும் விட்டும் ஒதுங்கி குர்ஆனும் ஸுன்னாவும் மாத்திரமே மார்க்கம் எனப் பின்பற்றிக் கொண்டு சொற்பமான மக்களைக் கொண்ட ஒரு கூட்டம் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஒரே தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு ஒதுங்கி வாழும் இக்கூட்டமே ஜமாஅதுல் முஸ்லிமீனாகும்.

உலகத்தின் சகல நாகரீகங்களையும் அனாச்சாரங்களையும் விட்டும் தூரமாகி ''குர்ஆனும் ஸுன்னாவுமே எங்களுக்கு கதி'' என வாழ்ந்து கொண்டிருக்கும் இச்சிறு கூட்டத்தின் குரலே "தெளிவு" எனும் பெயரில் இருமாத இதழாக வெளிவந்து கொண்டிருக்கின்றது.

மனிதர்களின் சகல பிரிவினர்களுக்குமான தீர்வு அல்குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் மாத்திரமே உள்ளது. இதன் படி தமது வாழ்க்கையை மாற்றிக் கொள்ளாதவரை மனிதரோ உலகமோ ஒரு போதும் நிம்மதியடைய முடியாது எனும் உண்மையை மக்கள் மத்தியில் படிப்படியாகவும் தகுந்த ஆதாரங்களுடனும் தெளிவுபடுத்துவதே இவ்விதழின் நோக்கமாகும்.

நீண்ட காலமாக கொள்கை ரீதியிலும், செயல்ரீதியிலும் மக்கள் மத்தியில் ஊறிப்போன தவறுகளைச் சுட்டிக்காட்டி குர்ஆன்-ஸுன்னாவைப் பார்த்து அவர்கள் அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்திலேயே மனிதக் கருத்துகள் ஏதும் கலவாத அல்லாஹ் - ரஸூலின் வார்த்தைகளை மாத்திரம் சுமந்துக் கொண்டு "தெளிவு" எனும் மாத இதழ் உங்களைத் தேடி வந்துள்ளது.

எவருக்கெல்லாம் அல்லாஹ் நேர்வழியை நாடியுள்ளானோ அவர்களின் கரங்களில் இப்புத்தகம் சென்றடைய வேண்டும்; அசத்தியங்கள் களையப்பட்டு சத்தியம் உலகில் நிலை நாட்டப்பட

வேண்டும் என்ற நோக்கிலேயே பல்வேறு சிரமங்களுக்கும், பொருளாதாரக் கஷ்டங்களுக்கும் மத்தியில் இதை வெளியிடுகின்றோம்.

எனவே சொற்ப விலையில் வெளிவரும் மிகப்பெறுமதி வாய்ந்த இப்புத்தகத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகளை வாங்கி ஏனையவர்களுக்கும் விநியோகித்து நற்பயன் பெறுமாறு அன்புடன் அனைவரையும் வேண்டுகின்றேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் சத்தியத்தை விரும்பும் உள்ளங்களை ஒரே குடையின் கீழ் ஒன்று சேர்ப்பானாக! என வேண்டி விடை பெறுகின்றேன்.

இவ்வண்ணம்
அன்புடன் ஆசிரியர்

# பிஸ்மில்லாஹ் , பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் கூற வேண்டிய சந்தர்ப்பங்கள்

சென்ற 3ம் இதழின் ‘‘கேள்வி - பதில்’’ பகுதியில் ‘‘பிஸ்மி’’ கூறுதல் சம்பந்தமாக வந்த கேள்விக்கு பதிலளிக்கும் போது, எச்சந்தர்ப்பங்களில் ‘‘பிஸ்மில்லாஹ்’’ என்றும்; எச்சந்தர்ப்பங்களில் ‘‘பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்’’ என்றும் கூற வேண்டும் என்றதொரு விளக்கம் அடுத்த இதழில் தருவதாக குறிப்பிட்டிருந்தோம். அதன் விபரம் வருமாறு:

புனிதமான இந்த இஸ்லாமிய மார்க்கத்தின் சட்டதிட்டங்களை அல்குர்ஆனிலிருந்தும் அஸ்ஸுன்னாவிலிருந்தும் பெற்று அதன்படி நடப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும். ஆனால் இன்று நடப்பது என்னவெனில், இவ்விரண்டையும் மக்கள் புறந்தள்ளிவிட்டு, அவையல்லாதவைகளைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள். அதனால் ஒரே மார்க்கமாக அன்று காணப்பட்ட இஸ்லாம் இன்று ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விதமாகக் காணப்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த வகையில் ‘‘பிஸ்மி’’யை எடுத்துக் கொண்டால், சிலர் ஒவ்வொரு காரியத்திற்கும் ‘‘பிஸ்மில்லாஹ்’’ என்று கூறி அக்காரியத்தைச் செய்வதையும், இன்னும் சிலர் ‘‘பிஸ்மில்லாஹ்’’ என்பதனைப் பூரணமாகக் கூறி தங்களது காரியங்களை ஆரம்பிப்பதனையும், ‘‘பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்’’ என்று கூற வேண்டிய இடத்தில் ‘‘பிஸ்மில்லாஹ்’’ என்று கூறுவதையும்;

“பிஸ்மில்லாஹ் ” என்று கூற வேண்டிய இடங்களில், “பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்” என்று கூறுவதனையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான குழப்ப நிலைக்குக் காரணம் குர்ஆன், ஸுன்னா புறக்கணிக்கப்பட்டமையேயாகும்.

எனவே இஸ்லாமிய கண்ணோட்டத்தில், “பிஸ்மியை” எந்தெந்த இடங்களில் எவ்வாறு ஓத வேண்டும்” என்பதனை நாம் தெளிவுபடுத்தவுள்ளோம். “பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்” என்று இரண்டு இடங்களிலும், “பிஸ்மில்லாஹ்” என்று சுமார் 20 சந்தர்ப்பங்களிலும் கூற வேண்டும என்பதனை ஸஹீஹான ஹதீஸ்களின் ஆதாரங்களுடன் கீழே தருகின்றோம்.

“பிஸ்மில்லாஹ்” என்று மட்டும் கூற வேண்டிய 20 இடங்கள் பின்வருமாறு:

## 01. வுழூச் செய்ய முன் .

قال النبي ﷺ تَوَضَّأُوا بِسْمِ اللهِ

“பிஸ்மில்லாஹ்” என்று (கூறி) வுழூச் செய்யுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( நஸாஈ - பாடம் : வுழூ )

## 02. ஒருவர் மற்றவருக்கு வுழூச் செய்ய தண்ணீரை ஊற்றும்போது:

قال النبي ﷺ خذ يا جابر فصبَّ عَلَيَّ وقُلْ **بِسْمِ اللهِ**

فَقَالَ جَابِرٌ فَصَبَبْتُ عَلَيْهِ وَقُلْتُ **بِسْمِ اللهِ**

“ஜாபிரே (தண்ணீரை) எடுத்து “பிஸ்மில்லாஹ்” எனக் கூறி எனக்கு ஊற்று” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “நான் நபி (ஸல்) அவர்களுக்கு “பிஸ்மில்லாஹ்” எனக் கூறி ஊற்றினேன்” என்று ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் :ஸுஹ்த் )

## 03. மலஜல கூடத்தினுள் நுழையும் போது .

قال النبي ﷺ إذا دخلتم الخلاء فقولوا **بِسْمِ اللهِ** أعوذ بالله من الخبث والخبائث

யா அல்லாஹ... (மனிதர்களிலும் ஜின்களிலும் உள்ள) கெட்ட ஆண்களிடம் இருந்தும், கெட்ட பெண்களிடம் இருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

இதை அல் உமரி பதிவு செய்துள்ளார்.

( பத்ஹுல் பாரி - பாகம் : 01, பக்கம் : 254 பிஸ்மில்லாஹ் தவிர உள்ளது புகாரி, முஸ்லிமில் பதிவாகியுள்ளது. )

## 04. தன் மனைவியுடன் உடலுறவு கொள்ள முன் .

بِسْمِ اللهِ اَللَّهُمَّ جَنِّبْنَا الشَّيْطَانَ وَجَنِّبِ الشَّيْطَانَ مَارَزَقْتَنَا

அல்லாஹ்வின் பெயரால் யா அல்லாஹ்... எங்களை விட்டும் ஷைத்தானை தூரமாக்கிவாயாக... மேலும் எங்களுக்கு நீ வழங்கியவற்றை (பிள்ளைகளை) விட்டும் ஷைத்தானை தூரமாக்கிடுவாயாக...

உங்களில் ஒருவர் தன் மனைவியிடம் (உடலுறவு கொள்ள) வரும்போது (மேலேயுள்ள துஆவை) ஓதி அவ்விருவருக்கும் குழந்தை முடிவு செய்யப்பட்டு விட்டால், அக்குழந்தைக்கு (ஷைத்தா னின்) எவ்வித தீங்கும் ஏற்படாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( ஸஹீஹுல் புகாரி - பாடம் : வுழூ )

## 05. ஒருவர் நோயுற்றிருக்கும் போது, அவரின் குணத்திற்காக வேண்டி, ஓதிப் பார்க்கும்போது :

ஒருமுறை ஜிப்ரயீல் அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, “முஹம்மதே! நீங்கள் நோயுற்றுள்ளீர்களா?” என்று கேட்க, “ஆம்” என்று நபி ந அவர்கள் கூறினார்கள். உடனே ஜிப்ரயீல் அவர்கள் பின்வருமாறு ஓதிப்பார்த்தார்கள் :

بِسْمِ اللّٰهِ أَرْقِيْكَ مِنْ كُلِّ شَيْءٍ يُؤْذِيْكَ مِنْ شَرِّ نَفْسٍ أَوْ عَيْنٍ

حَاسِدٍ اللهُ يَشْفِيْكَ بِسْمِ اللهِ أَرْقِيْكَ

அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு, உமக்கு நோவைத் தரக்கூடிய யாவற்றிலிருந்தும், ஒவ்வொரு ஆத்மாவின் தீங்கிலிருந்தும் அல்லது கண் திரு‘டியிலிருந்தும் பாதுகாப்பை வேண்டுகின்றேன். அல்லாஹ் உம்மை குணப்படுத்தட்டும். அல்லாஹ்வுடைய பெயரைக் கொண்டு உமக்கு நற்சுகத்தை வேண்டுகின்றேன்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

## 06. தன் உடம்பில் வலி வருத்தம் காணப்பட்டால், அவ்விடத்தில் தன் கையை வைத்து ஓதிப்பார்க்கும் போது .

உத்மான் பின் அபீ ஆஷ் தன் உடம்பில் வலி ஏற்பட்டுள்ளதை நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (உத்மானே!) உன் உடம்பில் வலியுற்ற இடத்தில் உனது கையை வைத்து

وَقُلْ بِسْمِ اللّهِ ثَلاَثًا

பிஸ்மில்லாஹ் என்று மூன்று முறையும்

وَقُلْ سَبْعَ مَرَّاتٍ

“ஏழு முறை (பின்வருமாறு) ஓது” என்று சொல்லிக் கொடுத்தார்கள்.

أَعُوْذُ بِاللهِ وَقُدْرَتِهِ مِنْ شَرِّ مَا أَجِدُ وَاُحَاذِرُ

இப்போதுள்ள நோயினதும், இனிமேல் ஏற்படவிருக்கும் நோயினதும் தீங்கை விட்டும்.˙. அல்லாஹ்வைக் கொண்டும், அவனது சக்தியைக் கொண்டும்பாதுகாப்புத் தேடுகின்றேன்.

(ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : ஸலாம்)

## 07. ஒருவரின் நோய் குணமடைய தன் பெரு விரலை நாக்கில் வைத்து நனைத்து, பின்னர் அதை தரையில் வைத்து, பின்னர் அதை உயர்த்தி அவருக்காகப் ஓதிப்பார்க்கும் போது .

بِسْمِ اللهِ تُرْبَةُ أَرْضِنَا بِرِيْقَةِ بَعْضِنَا يُشْفَى بِهِ سَقِيْمُنَا بِإِذْنِ رَبِّنَا

அல்லாஹ்வின் திருநாமத்தால் எங்கள் ''மியின் மண், எங்கள் சிலரின் உமிழ் நீர் மூலம் அல்லாஹ்வின் உத்தரவின்படி எங்கள் நோயாளிகள் குணப்படுத்தப்படுகின்றார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : ஸலாம் )

## 08. மையித்தை மண்ணறையில் வைக்கும்போது .

உங்களில் மரணித்தவர்களை மண்ணறையில் வைக்கும் போது இவ்வாறு ஓதுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

بِسْمِ اللّهِ وَعَلَى مِلَّةِ رَسُوْلِ الله

அல்லாஹ்வின் திரநாமத்தாலும் அல்லாஹ்வின் தூதரின் மார்க்கப்படியும் (இதை அடக்கம் செய்கின்றேன்)

( அஹ்மத், ஹாகிம் - ஸஹீஹ் )

## 09. உணவு அருந்த முன் .

قال النبي ﷺ سم الله وكل بيمينك وكل مما يليك

“அல்லாஹ்வின் திருநாமத்தைக் கூறி (பிஸ்மில்லாஹ்), உனது வலது கையால் உனக்கு முன்னால் இருப்பதை சாப்பிடு” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி - பாடம் : அதிகமான உணவு )

## 10. உணவு அருந்த முன் “பிஸ்மில்லாஹ்” கூற மறந்து விட்டால், “பிஸ்மில்லாஹி பீ அவ்வலிஹி வஆகிரிஹி” என்று கூற வேண்டும் .

قال النبي ﷺ إذا أكل أحدكم طعاما فليقل بسم الله
فإن نسي في أوله فليقل بسم الله في أوله وآخره

உங்களில் ஒருவர் உணவு அருந்தும் போது “பிஸ்மில்லாஹ” என்று கூறவும். அப்படி ஆரம்பத்தில் (கூற) மறந்து விட்டால், “பிஸ்மில்லாஹி பீ அவ்வலிஹி வஆகிரிஹி” என்று கூறவும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( அத்திர்மிதி - பாடம் : அதிகமான உணவு )

## 11. மிருகங்களை அறுக்கும் போது .

நபி (ஸல்) அவர்கள் இரண்டு ஆடுகளை ‘உழ்ஹிய்யா’ கொடுக்கும் போது,

بِسْمِ اللّٰهِ وَاللهُ أَكْبَرُ

“ பிஸ்மில்லாஹி வல்லாஹு அக்பர ” என்று கூறினார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : உழ்ஹிய்யா )

## 12. வேட்டையாடும் மிருகங்களை வேட்டையாட அனுப்பும் போது .

قال النبي ﷺ إذا أرسلت كلبك فاذكر اسم الله
وإن رميت سهمك فاذكر اسم الله

“ நீ வேட்டையாட (நாயை) அனுப்பினால், அல்லாஹ்வின் பெயரைக் ‘(பிஸ்மில்லாஹ்)’ கூறு நீ அம்பை எறிந்தால், அல்லாஹ்வின் திருநாமத்தைக் கூறு” நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : வேட்டை )

## 13. புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்கள் எங்களுக்கு அர்ப்பணிப்பாக மாமிசம் கொண்டு வந்து தந்து, அதில் அவர்கள் “பிஸ்மில்லாஹ்” கூறி இருப்பார்களா? என்ற சந்தேகம் ஏற்பட்டால் .

عن عائشة إنّ قوما يأتوننا باللحم لا ندري أذكر إسمَ الله عليه أم لا قال : سمّوا عليه أنتم وكلوه

நிச்சயமாக சிலர் எங்களுக்கு இறைச்சி கொண்டு வந்து தருகின்றார்கள். அல்லாஹ்வின் திருநாமம் அதற்கு கூறப்பட்டதா? இல்லையா? என்பது எங்களுக்கு தெரியாது (என்ன செய்யலாம்?) என்று அன்னை ஆயிஷா கேட்டார்கள். அதற்கு “நீங்கள் அதற்கு அல்லாஹ்வின் திருநாமத்தை (பிஸ்மில்லாஹ்) கூறி சாப்பிடுங்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( ஸஹீஹுல் புகாரி - பாடம் : அறுப்பு )

## 14. தங்கள் வீட்டிற்குள் நுழையும் போது.

உங்களில் ஒருவர் தன் வீட்டிற்குள் நுழையும் போதும், உணவு அருந்தும் போதும் அல்லாஹ்வின் திருநாமத்தைக் கூறினால், ஷைத்தான் அவனின் தோழர்களைப் பார்த்து, இன்றைக்கு உங்களுக்கு தங்குமிடமும் இல்லை; உணவும் இல்லை'' என்று கூறுகின்றான்.

وإن لم يذكر **بِسْمِ اللهِ** عند دخوله قال الشيطان أدركتم المبيت

நுழையும் போது "பிஸ்மில்லாஹ்'' என்று கூறவில்லையெனில், நீங்கள் தங்குமிடத்தைப் பெற்றுக் கொண்டு விட்டீர்கள் என்று ஷைத்தான் கூறுகின்றான்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

( ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : பருகுதல் )

**வீட்டிற்குள் நுழையும் போது ஓதும் துஆ :**

اَللّٰهُمَّ إِنِّي أَسْئَلُكَ خَيْرَ الْمَوْلَجِ وَخَيْرَ الْمَخْرَجِ بِسْمِ اللهِ وَلَجْنَا

بِسْمِ اللهِ خَرَجْنَا وَعَلَى اللهِ رَبِّنَا تَوَكَّلْنَا

யா அல்லாஹ்... நுழையும் இடத்தின் நலவையும், வெளியேறுமிடத்தின் நலவையும் நிச்சயமாக நான் உன்னிடம் வேண்டுகின்றேன்.

அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு நுழைந்தோம். அல்லாஹ்வின் பெயரைக் கொண்டே நாம் வெளியேறினோம். எங்கள் ரப்பாகிய அல்லாஹ்வின் மீதே (நாம்) நம்பிக்கையும் வைத்தோம்.

## 15. வீட்டிலிருந்து வெளியேறும் போது.

بِسْمِ اللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ

அல்லாஹ்வுடைய பெயரைக் கொண்டு (வெளியேறுகின்றேன்) அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வைத்தேன். அல்லாஹ்வுடைய உதவியின்றி (நன்மை செய்வதற்கோ, தீமையிலிருந்து தப்புவதற்கோ) எவ்வித சக்தியும் கிடையாது.

( திர்மிதி - பாடம் : பிரார்த்தனைகள் )

## 16. தூங்கும் போது “பிஸ்மில்லாஹ்” என்று கூறி கதவை மூட வேண்டும். பாத்திரங்களை மூட வேண்டும். விளக்குகளை அணைக்க வேண்டும். உணவு, குடி வகைகளை மூடி வைக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“நீங்கள் தூங்கும் போது விளக்குகளை அணைத்து விடுங்கள்; வாயில்களை பூட்டி விடுங்கள்; நீர் பைகளைக் கட்டி விடுங்கள்; உணவு

குடி வகைகளை மூடி விடுங்கள்; அல்லாஹ்வின் திருநாமத்தைக் கூறிக் கொள்ளுங்கள்.

மற்றுமொரு அறிவிப்பில் :

"பிஸ்மில்லாஹ்" என்று கூறி நீர் பையைக் கட்டிவிடுங்கள்; பிஸ்மில்லாஹ் கூறி பாத்திரங்களை மூடுங்கள்; பிஸ்மில்லாஹ் கூறி உங்களது விளக்கை அணைத்து விடுங்கள். நிச்சயமாக ஷைத்தான் (பிஸ்மில்லாஹ் கூறி) கட்டப்பட்ட நீர் உறையையும், (மூடப்பட்ட) வாயலையும், பாத்திரத்தையும் திறக்கமாட்டான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : பருகுதல்)

## 17.அல்லாஹ்வின் வழியில் போராடப் புறப்படும் போது.

قال النبي ﷺ أغزوا بسم الله في سبيل الله

"அல்லாஹ்வின் பாதையில் 'பிஸ்மில்லாஹ' என்று கூறி போராடுங்கள்" நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : ஜிஹாத் )

## 18. தூங்கும் போது “பிஸ்மில்லாஹ்” எனக் கூறி, தன் படுக்கை விரிப்பை மூன்று முறை உதறி விட வேண்டும்.

قال النبي ﷺ إذا جاء أحدكم إلى فراشه فلينفضه بصنفة ثوبه ثلاث مرات
وفي رواية مسلم ويسم الله

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“ உங்களில் ஒருவர் படுக்கைக்கு வந்தால், தன் படுக்கையின் ஓரத்தைப் பிடித்து மூன்று முறை உதறி விடவும. ”

ஸஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பில் :

“அல்லாஹ்வின் திருநாமத்தைக் கூறவும்” என வந்துள்ளது.

( ஸஹீஹுல் புகாரி - பாடம் : தௌஹீத் )

( ஸஹீஹ் முஸ்லிம் - பாடம் : திக்ர்,துஆ )

19. தன் வாகனம் (குதிரை, ஒட்டகம், கழுதை) குழப்பம் செய்து தன்னை கீழே புரட்டி விட்டால், “பிஸ்மில்லாஹ்” என்று கூற வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : தன் வாகனம் குழப்பம் செய்தால், ( இதனை குழப்பியது ஷைத்தான் என்று நினைத்து) “நாசமாகப் போன ஷைத்தான்” என்று கூற வேண்டாம். ஏனெனில் நீ

நாசமாகப் போன ஷைத்தான் என்று கூறினால், அவன் தன்னைப் பெரியவனாக நினைத்து, “ நான்தான் என் பலத்தால் இவனை வாகனத்திலிருந்து கீழே புரட்டி விட்டேன ” என்று நினைப்பான். (நீ விழும்போது அவ்வாறு கூறாது) “பிஸ்மில்லாஹ்” என்று கூறினால், அவன் அவனை அற்பமானவனாகக் கருதி, ஒரு ஈயை விட சிறியவனாகி விடுவான்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அஹ்மத் , அபூதாவூத் - ஸஹீஹ் புலூகுல் அமானி - பாகம் : 5, பக்கம் : 68 )

## 20. பிரயாணம் செய்பவர் வாகனத்தில் ஏறியதும் “பிஸ்மில்லாஹ்” எனக் கூறி பின்வரும் துஆவை ஓத வேண்டும்.

அலி பின் அபீதாலிப் அவர்கள் பிரயாணம் செய்ய ஒரு வாகனம் அவர்களிடம் கொண்டு வரப்பட்டது. வாகனத்தில் தங்கள் காலை வைத்ததும் “பிஸ்மில்லாஹ்” என்று கூறினார்கள். பிறகு அதில் நன்கு அமர்ந்ததும் “அல்ஹம்து லில்லாஹ்” என்று கூறினார்கள். பின்னர்

“ ஸுப்ஹானல்லதீ ” என்ற துஆவை இறுதி வரை ஓதினார்கள். பின்னர் “நான் இவ்வாறு செய்த பிரகாரமே நபி (ஸல்) அவர்களும் செய்யக் கண்டேன்” என்று கூற நான் பார்த்தேன் என்று அலி பின் ரபீஆ கூறுகின்றார்கள்.

( அபூதாவூத் - பாடம் : ஜிஹாத் )

( திரிமிதி - பாடம் : பிரார்த்தனைகள்)

மேற்கூறப்பட்ட 20 இடங்களிலும் "பிஸ்மில்லாஹ்" என்று மட்டும் கூற வேண்டும்.

பிஸ்மியைப் பூரணமாக இரண்டு இடங்களில் மட்டுமே கூற வேண்டும். அவையாவன :

01. கடிதங்கள் ஒப்பந்தங்கள் போன்ற ஏதாவத எழுதும் போது "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்று பூரணமாக எழுத வேண்டும்.

அ) அபூஸுப்யான் கூறுகின்றார் :

ஹிர்கல் மன்னர் நபி (ஸல்) அவர்களின் கடிதத்தைக் கொண்டு வரும்படி கோரினார். கொண்டு வந்து வாசிக்கப்பட்டது.

'அப்போது அதில் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்று இருந்தது. ( ஸஹீஹுல் புகாரி - பாடம் : வஹி ஆரம்பம் )

ஆ) நபி ஸுலைமான் அவர்கள் பல்கீஸ் என்ற அரசிக்குக் கடிதம் எழுதும் போது

"நிச்சயமாக இது ஸுலைமானிடமிருந்து (எழுதும் கடிதமாகும்.) பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

( ஸூரத்துந் நம்ல் : 30)

இ) ஹுதைபிய்யா உடன்படிக்கை எழுத எழுத்தாளரை நபி (ஸல்) அவர்கள் அழைத்து

“பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்” என எழுது எனக் கூறினார்கள்.

( ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் )

## 02. அல்குர்ஆனின் ஸூராக்களை ஆரம்பத்திலிருந்து ஓத நினைத்தால்

“பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்” என்று முழுமையாக ஓத வேண்டும். ஸூராக்களில் இடையிலிருந்து ஓதினால், ‘பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்’ என்று ஓதுவது நபிவழியல்ல. அஊது...... மட்டுமே ஓத வேண்டும்.

ஸூராக்களை தொழுகையில் ஓதினாலும் சரி, தொழுகையல்லாத வேறு சந்தர்ப்பங்களில் ஓதினாலும் சரி அதன் ஆரம்பத்தில் ‘பிஸ்மி’யை முழுமையாக ஓத வேண்டும். பராஅத் என்ற ஸூராவுக்கு மட்டும் பிஸ்மி ஓதக் கூடாது.

அ) “பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்” இறங்கும் வரை தனி ஸூராக்கள் எது என்பதை நபி (ஸல்) அவர்கள் அறிய முடியாதவர்களாக இருந்தார்கள்.

( அபூதாவூத் - பாடம் - தொழுகை )

ஆ) ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ‘‘எனக்கு ஒரு ஸூரா இறக்கப்பட்டுள்ளது’’ எனக் கூறி, ‘‘பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம், இன்னா அஃதைனா கல்கவ்தர்’’ என்று ஓதினார்கள்.

எனவே இவ்விரண்டு இடங்களில் மாத்திரமே ‘‘பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்’’ என்று பூரணமாக ஓத வேண்டும். ஏனைய சந்தர்ப்பங்களில் பிஸ்மியைப் பூரணமாக ஓதுவது நபி வழிக்கு மாற்றமான செயலாகும்.

# தொழுகை தொடர் : 03

## பல் துலக்கல் (மிஸ்வாக் செய்தல்)

01. ஒவ்வொரு தொழுகையின் போதும் மிஸ்வாக் செய்து கொள்வது மிகவும் சிறப்பு மிக்க ஒன்றாகும் .

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“என்னுடைய உம்மத்திற்கு நான் சிரமத்தைக் கொடுத்து விடுவேனோ என்றில்லையென்றால், ஒவ்வொரு தொழுகையின் போதும் மிஸ்வாக் செய்யும் படி அவர்களுக்குக் கட்டளையிட்டிருப்பேன்.”

( ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் )

02. அல்லது ஒவ்வொரு வுளூவின் போதும் மிஸ்வாக் செய்து கொள்ள வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“ என்னுடைய உம்மத்திற்கு நான் சிரமத்தைக் கொடுத்து விடுவேனோ என்றில்லையென்றால், ஒவ்வொரு வுளூவுடனும் மிஸ்வாக் செய்யும்படி அவர்களுக்கு கட்டளையிட்டிருப்பேன்.”
( இப்னு ஜாரூத் - ஸஹீஹ் )

03. தூக்கத்திலிருந்து எழுந்ததும் வுளூச் செய்வதற்கு மிஸ்வாக் செய்து வாயை சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அன்னை ஆயிஷா அவர்கள் கூறினார்கள் :

" இரவிலே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எழுந்தால் பல் துலக்குவதன் மூலம் தங்களின் வாயை அசைப்பவர் களாக இருப்பார்கள். " ( ஸஹீஹ் முஸ்லிம் )

மற்றுமொரு அறிவிப்பில்:

" பல் துலக்கி வுளூச் செய்தார்கள " என்றுள்ளது.

( ஸஹீஹ் முஸ்லிம் )

04. நாவையும் கூட பல் துலக்கும் கருவியினால் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

" பல் துலக்கும் குச்சியின் ஓரம் அவர்களின் நாவில் இருக்கும் நிலையில் நான் நபி (ஸல்) அவர்களிடத்தில் நுழைந்தேன"என அபூ மூஸா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

05. வீட்டினுள் நுழைந்ததும் பல் துலக்கிக் கொள்ள வேண்டும்.

“நிச்சயமாக நபியவர்கள் தங்களின் வீட்டினுள் நுழைந்தால் பல் துலக்குவதை முதலில் ஆரம்பிப்பார்கள்.”

( ஸஹீஹ் முஸ்லிம் )

## 06. பல் துலக்கியதன் பிறகு பல் துலக்கும் குச்சியைக் கழுவி வைக்க வேண்டும்.

“ கழுவி வைக்கும் பொருட்டு பல்துலக்கும் குச்சியை நபி (ஸல்) அவர்கள் என்னிடத்தில் தருவார்கள் ” என அன்னை ஆயஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகின்றார்கள்.

( அபூதாவூத் - ஹஸன் )

## 07. மிஸ்வாக் செய்து தொழப்படும் தொழுகையின் நன்மை மிஸ்வாக் செய்யாமல் தொழப்படக்கூடிய தொழுகையின் நன்மையை விட எழுபது மடங்கு அதிகமாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“ எந்தத் தொழுகைக்காக மிஸ்வாக் செய்யப்படுகின்றதோ அந்தத் தொழுகை மிஸ்வாக் செய்யாமல் தொழப்படக் கூடிய தொழுகையை விட எழுபது மடங்கு சிறப்பாக இருக்கின்றது. ”

( அஹ்மது, இப்னு குஸைமா )

# வுளூ செய்யும் முறை

01. வுளூச் செய்யும் பாத்திர நீரை மூடி வைக்க வேண்டும்.

வுளூச் செய்யும் தண்ணீரை மூடி வைக்கும் படி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களுக்கு கட்டளைப் பிறப்பிப்பார்கள்.

( இப்னு ஹுஸைமா - ஸஹீஹ் )

02. காலையில் தூங்கி எழுந்ததும் வுளூச் செய்யும் பாத்திரத்தினுள் கையை நுழைவிப்பதற்கு முன்னர் வெளியில் மூன்று முறை அதனைக் கழுவிக்கொள்ள வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

உங்களில் ஒருவர் தன் தூக்கத்திலிருந்து எழுந்தால் அவர் தன் கரத்தை மூன்று விடுத்தம் கழுவாத வரை பாத்திரத்தினுள் தாட்ட வேண்டாம்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

03. வுளூச் செய்வதற்கு முன்னர் “பிஸ்மில்லாஹ்” என்று கூறிக் கொள்ள வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"பிஸ்மில்லாஹ்" எனக் கூறி வுளூச் செய்யுங்கள்."

( நஸாஈ, இப்னு குஸைமா - ஸஹீஹ் )

குறிப்பு:

வுளூவில் "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்" என்று பூரணமாக ஓதுவதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது.

04. பிறகு வலது கையினால் ஒரு பிடி தண்ணீர் எடுத்து இரண்டு கைகளினதும் மணிக்கட்டு வரை நன்றாகத் தூய்மையாகி விட்டது எனக் கருதும் வரை தேய்த்துத் தேய்த்துக் கழுவ வேண்டும். விரல்களுக்கிடையிலும் குடைந்து விட வேண்டும். இவ்வாறு கைகளை மூன்று முறைக் கழுவ வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் "தங்கள் இரு மணிக்கட்டுகளையும் மூன்று முறைக் கழுவுவார்கள்." ( ஸஹீஹ் முஸ்லிம் )

நபி (ஸல்) அவர்கள் "தங்கள் இரு மணிக்கட்டுகளையும் தூய்மையாகும் வரைக் கழுவினார்கள்."

( திர்மிதி - ஸஹீஹ் )

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"விரல்களுக்கிடையில் குடைந்து விடு"

( திர்மிதி, இப்னு குஸைமா )

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“உனது கை, மற்றும் இரு கால்களுக்கிடையில் குடைந்து விடு”
( அஹ்மத், திர்மிதி )

05. பிறகு வலது கையில் ஒரு பிடி தண்ணீர் எடுத்து கொஞ்ச நீரை வாய்க்குச் செலுத்தி பிறகு அதனைக் கொப்பளிக்க வேண்டும். மீதமான நீரை நன்றாக மூக்கிற்குச் செலுத்த வேண்டும். நோன்பாளியாக இருந்தால் மூக்கிற்குத் தண்ணீர் செலுத்தும் விடயத்தில் மிகைப்படுத்தக் கூடாது. பிறகு இடது கையினால் மூக்கைச் சீறி விட்டு ஏற்கனவே மிஸ்வாக் செய்திருக்கா விட்டால் வாயை விரல்களினால் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் கொஞ்ச நீரினால் வாயைக் கொப்பளித்து, மீதமாக இருக்கக் கூடிய நீரை நாசிற்குச் செலுத்த வேண்டும்.

குறிப்பு:

வாய் கொப்பளிப்பதற்கும் நாசிக்குத் தண்ணீர் செலுத்துவதற்கும் வெவ்வேறாக தண்ணீர் எடுக்க வேண்டும் என்பதற்கு சரியான ஆதாரம் இல்லை.

“(நபி (ஸல்) அவர்கள்) மூன்று பிடி நீரின் மூலம் மூன்று முறை வாய்க் கொப்பளித்து, மூன்று முறை நாசிற்கு நீர் செலுத்தி, மூன்று முறை அதனைச் சீறி விட்டார்கள்.”

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் )

“பிறகு (நபி (ஸல்) அவர்கள்) தன் வலது கரத்தை வுளூச் செய்யும் பாத்திரத்தினுள் நுழைத்து, வாய்க் கொப்பளித்து, நாசிற்கும் நீர் செலுத்தினார்கள்.”

(ஸஹீஹுல் புகாரி)

“ஒரு பிடி தண்ணீர் அள்ளி வாய்க் கொப்பளித்து நாசிற்கும நீர் செலுத்தினார்கள்.” (இப்னு குஸைமா - ஹஸன்)

“பிறகு தனது வலது கரத்தை பாத்திரத்தினுள் நுழைத்து வாய்க் கொப்பளித்து நாசிற்கு நீர் செலுத்தி தன் இடது கையினால் சீறி விடுவார்கள். (இவ்வனைத்தையும் மூன்று முறை செய்வார்கள்.)”

( அஹ்மத், நஸாஈ, அபூதாவூத் )

தன் வாயினுள் நீரை எடுத்து வாய்க் கொப்பளித்து நாசிற்கு நீர் செலுத்தி தனது இடது கையினால் மூன்று முறை சீறி விடுவார்கள்.

( இப்னு குஸைமா )

“நீ நோன்பாளியாக இருந்தாலே தவிர நாசிக்கு நீர் செலுத்தும் போது மிகைப்படுத்திச் செய்.”

( அஹ்மத், அபூதாவூத், நஸாஈ, இப்னு ஹிப்பான், இப்னு குஸைமா )

“ தனது சில விரல்களை வாயினுள் நுழைவித்தார்கள். ”

( அஹ்மத் )

“ பல் துலக்குவற்கு விரலும் போதுமாகும். ”

( பைஹகி )

06. பிறகு வலது கையினால் ஒரு பிடி தண்ணீர் எடுத்து இரண்டு கைகளையும் ஒன்றிணைத்து முகத்தைக் கழுவ வேண்டும். கழுவும் போது கண் குழிகளை நன்றாகத் தேய்க்க வேண்டும். இந்த அமைப்பில் முகத்தை மூன்று முறைக் கழுவ வேண்டும்.

பிறகு ஒரு பிடி நீர் எடுத்து இவ்வாறாக இணைத்தார்கள் (அதாவது) தன் வலது கரத்தை தன் மற்றைய கையோடு இணைத்து இவ்விரண்டின் மூலமாக முகத்தைக் கழுவினார்கள். ( ஸஹீஹுல் புகாரி )

பிறகு தன் கரத்தை பாத்திரத்தினுள் நுழைத்து தன் முகத்தைக் கழுவினார்கள். ( ஸஹீஹுல் புகாரி )

“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரு கண் குழிகளையும் தேய்க்கக கூடியவர்களாக இருந்தார்கள்.”

( அஹ்மத், அபூதாவூத்,புலூகுல் அமானி, தபரானி )

பிறகு தனது வலது கரத்தை பாத்திரத்தினுள் நுழைத்து தன் முகத்தை மூன்று முறை கழுவினார்கள்.

( அஹ்மத், அபூதாவூத்,புலூகுல் அமானி, தபரானி )

07. பிறகு சிறிதளவு தண்ணீரை எடுத்து தாடையின் கீழ் செலுத்தி தாடியை மூன்று விடுத்தம் கோரி விட வேண்டும்.

"வுளூச் செய்தார்கள். தன் தாடியை அதன் கீழ் புறத்திலிருந்து தன் விரல்களினால் குடைந்து விட்டார்கள்."
( ஹாகிம் - ஹஸன் )

"தன் தாடியைக் குடைந்து விடக்கூடியவர்களாக இருந்தார்கள்."

( திர்மிதி - ஸஹீஹ் )

"தன் தாடியை மூன்று முறைக் குடைந்து விடுவார்கள்."

( அஹ்மத் )

08. பிறகு ஒருபிடி தண்ணீர் எடுத்து வலது கையை அதனது முழங்கை வரை அல்லது அதனை விட உயர்த்திக் கழுவ வேண்டும். இவ்வாறு மூன்று முறைக் கழுவ வேண்டும். அதன் பிறகு ஒரு பிடி தண்ணீர் எடுத்து இடது கையை அதனது முழங்கை வரை அல்லது அதனை விட உயர்த்திக் கழுவ வேண்டும். இவ்வாறு மூன்று முறைச் செய்ய வேண்டும்.

“பிறகு தன் முகத்தையும் இரு கரங்களையும் முழங்கை வரை மூன்று முறைக் கழுவினார்கள்.”

( ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் )

“தனது வலக்கரத்தை தோள் புஜம் வரை உயர்த்திக் கழுவினார்கள். பிறகு தனது இடது கரத்தை தோள் புஜம் வரை உயர்த்திக் கழுவினார்கள்.”

( ஸஹீஹ் முஸ்லிம் )

“பிறகு ஒரு பிடி தண்ணீர் எடுத்து அதன் மூலம் தனது வலது கரத்தைக் கழுவினார்கள். அதன் பிறகு ஒரு பிடி தண்ணீர் எடுத்து அதன் மூலம் தன் இடது கரத்தைக் கழுவினார்கள்.”

( ஸஹீஹுல் புகாரி )

09. இரு கரங்களையும் நன்கு தேய்த்துக் கழுவ வேண்டும். “தனது இரு கரங்களையும் நன்கு தேய்த்து வுளூச் செய்தார்கள்.”

( ஹாகிம் - ஸஹீஹ் )

10. பிறகு வலது கையில் ஒரு பிடி நீர் எடுத்து இரு கரங்களையும் நனைத்து அதன் பிறகு இரு கரங்களின் மூலம் தலையின் அனைத்து பகுதியையும் தடவ வேண்டும். இரு கரங்களையும் நெற்றியில் வைத்து பிடரி வரை எடுத்துச் சென்று பிறகு இரு கரங்களையும் நெற்றி வரை எடுத்து வர வேண்டும்.

“பிறகு தன் இரு கரங்களின் மூலம் தன் தலையைத் தடவினார்கள்....... தன் தலையின் முற் பகுதியைக் கொண்டு ஆரம்பித்து அவ்விரண்டையும் (இரு கரங்களையும்) தன் பிடரி வரை எடுத்துச் சென்றார்கள். எந்த இடத்திலிருந்து ஆரம்பித்தார்களோ அந்த இடத்திற்கு மீண்டும் மீட்டி அவ்விரண்டையும் கொண்டு வந்தார்கள்.”

( ஸஹீஹுல் புகாரி )

“தன் இரு கரங்களிலும் எஞ்சியிருக்கக் கூடியதல்லாத நீரைக் கொண்டு தன் தலையை மஸ்ஹு செய்தார்கள்.”

( ஸஹீஹ் முஸ்லிம் )

“ பிறகு ஒரு பிடி நீர் எடுத்து அதனை தன் இடது கையிலே ஊற்றிப் பிறகு தன் தலையை மஸ்ஹு செய்தார்கள்.”

“தனது வலது கரத்தை பாத்தரைத்தினுள் நுழைத்து...... பிறகு அதனை இடது கரத்தாலே தடவி அதன் பிறகு தனது இரு கரங்களையும் கொண்டு தன் தலையை ஒரு முறை மஸ்ஹு செய்தார்கள்.”

(அஹ்மத், இப்னு குஸைமா - ஸஹீஹ் )

11. பிறகு பெருவிரல் மற்றும் சுட்டு விரலை தண்ணீரினால் நனைத்து சுட்டு விரலை காதின் துவாரத்தினுள் நுழைத்து அச்சுட்டு விரலினால் காதின் உட்புறத்தை மஸ்ஹு செய்ய வேண்டும். பெருவிரலின் மூலம் காதின் வெளிப்புறத்தை மஸ்ஹு செய்ய வேண்டும்.

“எந்த நீரைக் கொண்டு தலையை மஸ்ஹு செய்தார்களோ அந்த நீர் அல்லாது தன் இரு காதுகளுக்காக வேண்டி வேறு நீர் எடுத்தார்கள்.” ( ஹாகிம் )

“தனது இரு சுட்டு விரல்களையும் தன் காதினுள் நுழைத்தார்கள். தனது இரு பெரு விரல்களைக் கொண்டு இரு காதுகளின் வெளிப் புறத்தையும் இரு சுட்டு விரல்களைக் கொண்டு தன் இரு காதுகளின் உட்புறத்தையும் மஸ்ஹு செய்தார்கள்.”

( அபூதாவூத் )

“தன் இரு காதுகளின் துவாரத்தினுள் தன் இரு விரல்களை நுழைத்தார்கள். ” ( அபூதாவூத் )

“ தன் இரு விரல்களையும் அவ்விரண்டினுள் (காதினுள்) நுழைத்தார்கள்.” ( இப்னு குஸைமா )

“இரு சுட்டு விரல்களைக் கொண்டு அவ்விரண்டினது உட்புறங்களையும், தனது இரு பெரு விரல்களைக் கொண்டு

அவ்விரண்டினது வெளிப்புறங்களையும் மஸ்ஹு செய்தார்கள்.''

( நஸாஈ )

12. பிறகு வலது கையினால் வலது காலில் தண்ணீரை ஊற்றிஇடது கையினால் கரண்டைக்கால் வரை அல்லது அதனை விட உயர்த்தி நன்கு தேய்த்துக் கழுவ வேண்டும். இடது கையின் சின்னி விரலினால் கால்களுக்கிடையில் குடைய வேண்டும். இவ்வாறு வலது காலை மூன்று விடுத்தம் கழுவ வேண்டும். பிறகு இடது காலையும் இவ்வாறு மூன்று விடுத்தம் கழுவ வேண்டும்.

''கரண்டைக்கால் வரை தன் இரு கால்களையும் மூன்று முறைக் கழுவினார்கள்.'' (ஸஹீஹுல் புகாரி )

''பிறகு தனது வலது காலை கரண்டை வரை மூன்று முறைக் கழுவினார்கள். அதன் பிறகு இடது காலை அது போன்றே கழுவினார்கள்.'' (ஸஹீஹ் முஸ்லிம் )

''பிறகு தனது வலது காலை குதிரை முகம் வரைக்கும் உயர்த்திக் கழுவினார்கள். அதன் பிறகு தன் இடது காலை குதிரை முகம் வரைக்கும் உயர்த்திக் கழுவினார்கள்.''

(ஸஹீஹ் முஸ்லிம் )

''பிறகு தனது வலது கையை பாத்திரத்தினுள் நுழைத்து தனது வலது காலின் மீது நீரை ஊற்றி தனது இடது கரத்தைக் கொண்டு அதனை மூன்று முறைக் கழுவினார்கள்.''

(அஹ்மத், இப்னு குஸைமா )

“ அதன் பிறகு தனது வலது கையினால் தனது இடது பாதத்தின் மீது நீரை ஊற்றி தனது இடது கரத்தினால் அதனை மூன்று முறைக் கழுவினார்கள். ”

(ஸஹீஹ் முஸ்லிம் )

“தன் இரு கால்களையும் அவ்விரண்டும் தூய்மையாகும் வரை (நன்கு தேய்த்துக்) கழுவினார்கள். ”

(பைஹகி, அபூதாவூத் )

“ தனது இடது கையின் சின்னி விரலின் மூலம் தனது இரு கால்களின் விரல்களுக்கிடையில் குடைந்தார்கள். ”

(தாரகுத்னீ, அபூதாவூத் )

“ தன் இரு பாதங்களின் விரல்களுக்கிடையில் மூன்று முறை குடைந்தார்கள். ” (தாரகுத்னீ )

13. பிறகு ஒரு பிடி தண்ணீர் எடுத்து தன் ஆடையில் தெளித்துக் கொள்ள வேண்டும்.

“ ஒரு பிடி தண்ணீர் எடுத்து அதனை தன் அபத்திற்குத் தெளித்தார்கள். ” (அஹ்மத், புலூகுல் அமானி )

14. பிறகு பின்வரும் வார்த்தைகளைக் கூற வேண்டும். இந்த வார்த்தைகளைக் கூறுவதன் மூலம் அவருக்காக சுவனத்தின் எட்டு வாயில்களும் திறந்து விடப்படுகின்றன.

அல்லாஹ் ஒருவனைத் தவிர (தீர்ப்பாளன், கட்டுப்பாட்டிறகு உரித்துடையவன், க்‘ட ந்‘டங்களை நீக்கக் கூடியவன்) வேறெவனும் இல்லை என நான் சான்று பகர்கின்றேன். அவனுக்கு எவரும் கூட்டும் இல்லை. மேலும் நான் நிச்சயமாக முஹம்மது நபி அவர்கள் அவனது அடியானும் அவனது தூதர் என சாட்சி பகர்கின்றேன்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

“ எவர் வுளூச் செய்து “அஷ்ஹது” என்ற துஆவை ஓதுகின்றாரோ அவருக்காக சுவனத்தின் எட்டு வாயில்களும் திறக்கப்படுகின்றன. அவர் தான் நாடியதன் மூலம் நுழைந்து கொள்வார்.”

(ஸஹீஹ் முஸ்லிம் )

குறிப்பு:

எவர் ஒருவர் வுளூச் செய்ததன் பிறகு கீழ்வரும் துஆவை ஓதுகின்றாரோ அந்த துஆ ஒரு தாளில் எழுதப்பட்டு

முத்திரையிடப்படுகின்றது. மறுமை நாள் வரை அந்த முத்திரை உடைக்கப்பட மாட்டாது.

“யா அல்லாஹ்... நீ தூய்மையானவன். மேலும், நீ உன் புகழைக் கொண்டு (அனைத்து பலயீனங்களிலிருந்து) தூய்மையானவன். உன்னைத் தவிர எந்த இலாஹும் இல்லை என்று நான் சான்று பகர்கின்றேன். நான் உன்னிடத்திலே பாவ மன்னிப்புத் தேடுகின்றேன். நான் உன்னிடத்திலே மீளுகின்றேன்.”

எவனொருவன் வுளுச் செய்து அவன் தன் வுளுவிலிருந்து முற்றுப் பெற்றதன் பிறகு “ஸுப்ஹானகல்லாஹும்ம” என்ற துஆவை ஓதுகின்றானோ, அந்த துஆ ஒரு வெள்ளைத் தாளில் எழுதப்பட்டு மறுமை நாள் வரை உடைக்கப்படாமல் இருக்கும் பொருட்டு முத்திரையிடப்படுகின்றது.

(நஸாஈ, ஹாகிம், ஜாமிஉஸ் ஸகீர்)

## 15. வுளுச் செய்ததன் பிறகு துவாயினால் முகத்தைத் துடைத்துக் கொள்ளலாம்.

வுளுச் செய்ததன் பிறகு (முகத்தைத்) துடைப்பதற்கு றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு ஒரு துணி இருந்தது.

(திர்மிதி )

இதனை அஹ்மத், முஹம்மது ஷாகிர் ஸஹீஹ் என்கின்றார்.

# ஸஹீஹான ஹதீஸ்

## ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலா இலாஹ கய்ருக

அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரிய வார்த்தை ஒரு அடியான் (இவ்வாறு) கூறுவதாகும்:

யா அல்லாஹ்... நீ மிகவும் தூயவன். உனது புகழைக் கொண்டு (அனைத்துக் குறைகளை விட்டும் துஸய்மையானவன்) உனது பெயர் அருள் பொருந்தியது. உனது அந்தஸ்து உயர்வானது. உன்னைத் தவிர (தகுதியுள்ள) இலாஹ் எவருமில்லை.

அல்லாஹ்விற்கு மிகவும் கோபத்திற்குரிய விடயம்.˙.

ஒரு அடியான் மற்றொரு அடியானைப் பார்த்து “நீ அல்லாஹ்வைப் பயந்து கொள் ” என்று கூற, மற்றவர் “உன்னை நீ பார்த்துக் கொள ” என்று கூறுவதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அன்னஸாஈ - அல் அஹாதீஸுஸ் ஸஹீஹா - எண் - 2939)

# பலயீனமா(லயீபா)ன ஹதீஸ்

## “யார் அஸர் தொழுகையின் பின் தூங்குகிறாரோ அவரின் சிந்தனை பறிக்கப்பட்டு விடும்.”

இப்னு ஹிப்பான் லுஅபா என்ற நூலில்

அல் அஹாதீஸுஸ் ஸஹீஹா - எண் - 39

குறிப்பு:

“அஸர் தொழுகையின் பின் தூங்கினால் அவருக்குப் பைத்தியம் பிடிக்கும்” என்ற ஒரு கருத்து மக்கள் மத்தியில் பரவலாக கூறப்படுகிறது. இக்கருத்து இந்த பலயீனமான ஹதீஸை வைத்தே பரப்பப்பட்டுள்ளது. இந்த ஹதீஸ் பலயீனமானதாகக் காணப்படுவதனால், இக்கருத்தும் பிழையானது என்பது தெளிவாகிவிட்டது.

# இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்

“யார் என்னையும் என் தந்தை இப்ராஹீம் அவர்களையும் ஒரே வருடத்தில் தரிஸித்தால் (ஸியாஹத் செய்தால்) சுவனம் நுழைந்து விட்டார்.” என நபி அவர்கள் கூறியதாக அறிவிக்கப்படுகின்றது.

(அல் அஹாதீஸு லயீபா வல் மவ்லூஆ - எண் - 46)

01. “இது இட்டுக்கட்டப்பட்டது” என்று இமாம் நவவி கூறுகின்றார்.
02. இமாம் ஸுயூதி இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களில் பதிவு செய்துள்ளார்கள்.
03. “இது அடிப்படையற்ற மவ்லூஃ - இட்டுக்கட்டப்பட்டது” என்று இமாம் இப்னு தைமிய்யா கூறுகின்றார்கள்.
04. இமாம் ஷவ்கானி இதை அங்கீகரிக்கின்றார்.

# ஜனாஸா

## தொடர்-03

01.ஒரு முஸ்லிம் ஜனாஸாவிற்கு பின்னால் செல்ல வேண்டும். ஜனாஸா தொழுகை முடிந்ததும் திரும்பி வந்துவிட்டால் குற்றமில்லை.

நபி (ஸல்) அவர்கள் ஜனாஸாவிற்கு வந்துஇ அதற்கு தொழுகை நடாத்துவார்கள். சிலவேளை திரும்பிவிடுவார்கள். சிலவேளை ஜனாஸா அடக்கும் வரை இருப்பார்கள்.

(இப்னு ஹிப்பான், அல்ஹாகிம், அஹ்மத் - ஸனதுஹு ஸஹீஹ்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிமின் மீதுள்ள கடமைகள் ஐந்து. ஸலாத்திற்கு பதில் கூறுதல், ஜனாஸாவிற்கு பின்னால் தொடர்தல் (செல்லுதல்) ..........

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

02. ஜனாஸாவை வேகமாக எடுத்துச் செல்ல வேண்டும். ஓடிச்செல்லாது வேகமாக நடந்துச் செல்ல வேண்டும்.

அ) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஜனாஸாவை எடுத்துக் கொண்டு வேகமாக செல்லுங்கள். ஏனெனில் அது ஸாலிஹானதாக இருந்தால், நலவின்பால் அதனை நெருக்கி வைத்தவர்களாவீர்கள். அது நல்லதாக இல்லையென்றால், அது மோசமானதாகத்தான் இருக்கும். அப்போது அதனை உங்கள் தோளை விட்டும் கீழே வைத்தவர்களாவீரகள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ முஸ்லிம்)

ஆ) அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நிச்சயமாக நாங்கள் ஜனாஸாவை எடுத்துக் கொண்டு மிக வேகமாக நபி (ஸல்) அவர்களுடன் நடப்பவர்களாக என்னைக் கண்டேன்.

(நஸாஈ, அஹ்மத், அபூதாவூத் - ஸனதுஹு ஸஹீஹ் - அஹ்காமுல் ஜனாயிஸ்)

03. வாகனத்தில் செல்பவர்கள் ஜனாஸாவுக்கு பின்னால் செல்ல வேண்டும். நடந்து செல்பவர்கள் அதற்கு சமீபமாக முன்னால், பின்னால், வலது, இடது பக்கமாக செல்லலாம்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

வாகனத்தில் செல்பவர் ஜனாஸாவுக்கு பின்னால் செல்வார். நடந்து செல்பவர் பின்னாலும், முன்னாலும், அதற்கு வலதிலும், இடதிலும் நெருங்கிச் செல்வார்.

(அஹ்மத், திர்மிதி, அபூதாவூத், நஸாஈ - ஸனதுஹு ஸஹீஹ் - மிர்ஆத்)

## 04. தக்க காரணமின்றி ஜனாஸாவுடன் செல்லும் போது வாகனத்தில் செல்லக் கூடாது.

நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவுனிடமிருக்கும் போது அவர்கள் ஏறிச் செல்ல ஒரு வாகம் கொண்டு வரப்பட்டது. அதில் ஏற மறுத்து விட்டார்கள். (ஜனாஸாவை அடக்கிவிட்டு) திரும்பியதும் வாகனம் கொண்டு வரப்பட்டது. உடனே அதில் ஏறிக் கொண்டார்கள். அவர்களிடம் விபரம் கோரப்பட்டது, “வானவர்கள் நடந்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நடக்கும் போது நான் ஏறி வர விரும்பவில்லை.வானவர்கள் சென்றதும் நான் ஏறிக்கொண்டேன்.” எனக் கூறினார்கள்.

(ஹாகிம், அபூதாவூத் - ஸனதுஹு ஸஹீஹ் - அஹ்காமுல் ஜனாயிஸ்)

## 05. பெண்கள் ஜனாஸாவிற்கு பின்னால் செல்லக் கூடாது.

உம்மு அதிய்யா (ரலி) கூறுகின்றார்கள்:

ஜனாஸாவிற்கு பின்னால் செல்வதை விட்டும் நாங்கள் தடுக்கப்பட்டோம்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ முஸ்லிம்)

06. ஜனாஸாவுடன் சப்தமிட்டு அழுபவர்கள் சென்றால் மற்றவர்கள் யாரும் அதனுடன் செல்லாது விலகிக் கொள்ள வேண்டும்.

எந்த ஜனாஸாவுடன் அழுபவர்கள் செல்கின்றார்களோ அதைத் தொடர்ந்து செல்வதை விட்டும் நபி (ஸல்) அவர்கள் எங்களைத் தடுத்தார்கள் என்று இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(இப்னுமாஜா, அஹ்மத் - இது ழைய்யித் என்ற தரத்திலுள்ளது.

புலூகுல் அமானி – அஹ்காமுல் ஜனாஇஸ்)

07. ஜனாஸாவிற்கு பின்னால் நெருப்புச் சட்டி எடுத்துச் செல்லக் கூடாது.

அபூமூஸா (ரலி) அவர்கள் மரணத் தருவாயில் சில வசிய்யத்களைச் செய்தார்கள். அதில் "நான் மரணித்துவிட்டால் என்னுடைய ஜனாஸாவிற்கு பின்னால் நெருப்புச் சட்டிக் கொண்டு வரவேண்டாம்." என்றார்கள். அப்போது அங்கிருந்தவர்கள், "இது சம்பந்தமாக நபி (ஸல்) அவர்களிடம் ஏதும் செவியுற்றீர்களா?" எனக் கேட்டபோது, "ஆம், நபி (ஸல்) அவர்களிடம் கேட்டது தான்" என்றார்கள்.

(அஹ்மத், அல்பைஹகி, இப்னுமாஜா-ஸனதுஹு ஹசன்-அல்ஹாகமுல் ஜனாஇஸ்)

08.ஜனாஸாவை சுமந்து சென்றவர்கள் வுழூச் செய்துகொள்ள வேண்டும்.

"யார் ஜனாஸாவை சுமந்து சென்றாரோ, அவர் வுழூச் செய்துக் கொள்ளவும்.

(அபூதாவூத், திர்மிதி - ஸனதுஹு ஸஹீஹ். அஹ்காமுல் ஜனாஇஸ்)

# ஜனாஸாத் தொழுகை

01.ஜனாஸாத் தொழுகை பள்ளிக்கு வெளியில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தொழ வேண்டும்.

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மானக்கேடான விடயத்தில் ஈடுபட்டு பிடிபட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட, அவ்விருவரும் பள்ளிக்கு பக்கத்தில் ஜனாஸாக்கள் வைக்குமிடத்தில் கல்லெறிந்து கொல்லப்பட்டார்கள்

(ஸஹீஹுல் புகாரி)

- ஜனாஸாக்கள் வைத்து தொழுகை நடாத்த தனியிடம் இருந்திருக்கிறது என்பதை இந்த ஹதீஸ் காட்டுகிறது.

ஜாபிர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எங்களில் ஒருவர் வபாத்தாகிவிட்டார். அவரை குளிப்பாட்டி நபி (ஸல்) அவர்கள் தொழுவிப்பதற்காக வேண்டி ஜனாஸாக்கள் வைக்கப்படும் இடமாகிய “மகாமு ஜிபரயீல்” என்ற இடத்தில் வைத்தோம். பின்பு அவருக்குத் தொழுகை நடாத்த நபி (ஸல்) அவர்களுக்குச் செய்தி அனுப்பினோம். அவர்கள் எங்களோடு வந்து தொழுகை நடாத்தினார்கள்.

(அல்ஹாகிம், அஹ்மத் - ஸஹீஹ்)

02. ஜனாஸாவை இமாமிற்கும் கிப்லாவிற்கும் இடையில் வைக்க வேண்டும். ஜனாஸா ஆணாக இருந்தால், இமாம் அவரின் தலைக்கு நேராகவும், பெண்ணாக இருந்தால் ஜனாஸாவின் நடுப்பகுதிக்கும் நேராகவும் வைக்க வேண்டும்.

அனஸ் (ரலி) அவர்கள் ஒரு (ஆண்) ஜனாஸாவிற்கு தொழுகை நடாத்தினார்கள். அப்போது அவரின் தலைக்கு நேராக நின்றார்கள். பிறகு ஒரு பெண் ஜனாஸா கொண்டு வரப்பட்டது. அதற்கு அதன் நடுப்பக்கமாக நின்றார்கள். அவ்வேளை "அலா" என்பவர், "நபி (ஸல்) அவர்களை இப்படிததானா செய்யக் கண்டீர்கள்" எனக் கேட்க, அனஸ் (ரலி) அயவர்கள் "ஆம்" என்றார்கள்.

(திர்மிதி, அபூதாவூத், அஹ்மத் - ஸனதுஹூ ஸஹீஹ் - அஹ்காமுல் ஜனாஇஸ்)

03. மஃமூம்கள் வரிசையாக நிற்க வேண்டும்.

"அவர்களை நபி (ஸல்) அவர்கள் வரிசைப் படுத்தினார்கள்"

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

04. பின்னர் இமாம் "அல்லாஹூ அக்பர்" என்று முதல் தக்பீர் கட்ட வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் ஜனாஸாவுக்கு நான்கு தக்பீர்கள் கட்டினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

05. முதல் தக்பீர் கட்டியதும் பாதிஹா ஸூரா ஓத வேண்டும்.

இப்னு அப்பாஸ் அவர்கள் ஒரு ஜனாஸாவுக்கு தொழுகை நடாத்தினார்கள். அப்போது சப்தமிட்டு பாதிஹா ஸூரா ஓதினார்கள். தொழுகை முடிந்ததும், “பாதிஹா ஓதுவது ஸூன்னத் என்பதை நீங்களும் அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே நான் சப்தமிட்டு ஓதினேன்.

(ஸஹீஹுல் புகாரி)

“ஜனாஸாத் தொழுகையில் ஸூன்னத் என்னவெனில் முதல் தக்பீரில் அமைதியாக பாதிஹா ஸூரா ஓதுவதாகும்” என்று அபூ உமாமா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(நஸாஇ - ஸனதுஹூ ஸஹீஹ், மிர்ஆத் 3/477)

- குறிப்பு : அஸ்ஸூன்னா என்ற பதம் நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரத்தை குறிக்கும்.

பிறகு தனக்குள் மெதுவாக (பாதிஹா) ஓதுவார் என்று இமாம் ஷாபிஈ ரஹ்மதுல்லாஹ், அபூ உமாமாவைத் தொட்டும் அறிவித்துள்ளார்கள். இதை இமாம் பைஹகி பலமானது என்கிறார்.

(நைலல் அவ்தார்)

06. பாதிஹாவுக்குப் பின் மற்றுமொரு ஸூரா ஓத வேண்டும்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், ஜனாஸாத் தொழுகையில் பாதஜஹா ஸூரா ஓதிவிட்டு மற்றுமொரு ஸூரத்தையும் ஓதினார்கள். பின்பு இது ஸுன்னத் என்றும், இது எண்மை என்றும் கூறினார்கள்.

(நஸாஇ - ஸனதுஹு ஸஹீஹ், நைலுல் அவ்தார், அஹ்காம்)

07. இரண்டாவது தக்பீர் "அல்லாஹு அக்பர்" என்று கட்ட வேண்டும். அதில் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்ல வேண்டும்.

ஜனாஸாத் தொழுகையில் ஸுன்னத் என்னவெனில்...... பிறகு நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வதாகும்.

(அப்துர் ரஸ்ஸாக், நஸாஈ - ஸனதுஹு ஸஹீஹ், மிர்ஆத், அஹ்காம்.)

08. பின்னர் மூன்றாவது தக்பீர் கட்டி பின்வரும் துஆவை இமாம் சப்தமிட்டு ஓத வேண்டும்.

யா அல்லாஹ்! அவரது (பாவங்களை) மன்னித்தருள்வாயாக! அவருக்கு அருள் புரிந்திடுவாயாக! அவரை மன்னித்து விடுவாயாக! அவருக்கு ஆரோக்கியத்தை வழங்கிடுவாயாக! அவரை கண்ணியமான முறையில் உபசரித்துடுவாயாக! அவர் புகுமிடத்தை விசாலமாக்கிடுவாயாக! அவரை நீரைக் கொண்டும், பனிக் கட்டியைக் கொண்டும், ஆலங்கட்டியைக் கொண்டும் கழுவி விடுவாயாக! அசுத்தங்களிலிருந்து வெள்ளைத் துணி தூய்மையாக்கப்படுவது போன்று, அவரை பாவங்களிலிருந்து தூய்மைப் படுத்திடுவாயாக! அவருடைய வீட்டை விடச் சிறந்த வீட்டையும், அவருடைய குடும்பத்தை விடச் சிறந்த குடும்பத்தையும், அவருடைய மனைவியை விடச் சிறந்த மனைவியையும் அவருக்கு வழங்கிடுவாயாக! அவரை, சுவனத்திலேயே நுழைத்திடுவாயாக! அவரை கப்ருடைய தண்டனை, நரக வேதனை போன்றவற்றை விட்டும் பாதுகாத்துவிடுவாயாக!

(ஸஹீஹ் முஸ்லிம்)

- குறிப்பு: இந்த ஹதீஸை அறிவிக்கும்அவ்ப் பின் மாலிக் (ரலி) அவர்கள் இந்த பிரார்த்தனையை கேட்டுவிட்டு “இந்த மையித்தாக நான் இருந்திருக்க வேண்டுமே!” என ஆசைப்பட்டதாக இதே அறிவிப்பில் வந்துள்ளது. இமாம் மூன்றாவது தக்பீரிற்குப் பின் செய்யும் பிரார்த்தனையை சப்தமிட்டு செய்ய வேண்டும் என்பதற்கு இது மிகத் தெளிவான ஆதாரமாகும்.

## அல்லது பின்வரும் துஆவை இமாம் சப்தமிட்டு ஓத வேண்டும்.

யாஅல்லாஹ் ! எங்களிலே உயிரோடு உள்ளவர்களையும், எங்களிலே மரணித்து விட்டவர்களையும், எங்களில் சமூகமளித்தோரையும், எங்களில் சமூகமளித்தோரையும், எங்களிலே ஆண்களையும், எங்களிலே பெண்களையும்ஈ மண்ணித்து விடுவாயாக! யா அல்லாஹ்! எங்களிலே யாரை (நீ) உயிர் வாழச் செய்கின்றாயோ! அவரை இஸ்லாத்தின் மீது உயிர்வாழச் செய்திடுவாயாக! எங்களிலே யாரை மரணிக்கச் செய்கின்றாரோயோ, அவரை ஈமானுடன் மரணிக்கச் செய்திடுவாயாக! யா அல்லாஹ்! அவருடைய நற்கூலியை (எங்களுக்கு கிடைப்பதை) விட்டும் எங்களைத் தடுத்துவிடாதே! அவருக்குப் பிறகு எங்களை வழிதவறவும் செய்து விடாதே!

(திர்மிதி, நஸாஈ, அஹ்மத், அபூதாவூத் - ஸனதுஹூ ஸஹீஹ்)

அவ்ப் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஜனாஸாவுக்குத் தொழுகை நடாத்தினார்கள். அதில் “அல்லாஹும்ம மஃபிர் லஹூ....” என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

09. அதன் பின்னர் நான்காவது தக்பீர் “அல்லாஹு அக்பர்” என்று கட்ட வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் நான்கு தக்பீர்கள் கட்டினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

10. ஒவ்வொரு தக்பீரிலும் கையை உயர்த்தி உயர்த்திக் காட்ட வேண்டும்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஜனாஸாவின் எல்லாத் தக்பீர்களிலும் தங்கள் இரு கைகளையும் உயர்த்துபவர்களாக இருந்தார்கள்.

(அத்தாரகுத்னி)

11. நான்காவது தக்பீருக்குப் பின்னர் வலது, இடது இரு பக்கங்களுக்கும் ஸலாம் கொடுக்க வேண்டும்.

இப்னு மஸ்ஊத் அவர்கள் கூறுகின்றார்கள்:

நபி (ஸல்) அவர்கள் செய்து மூன்று விடயங்கள் இருக்கின்றன. அவைகளை இன்று மக்கள் விட்டுவிட்டார்கள். அவைகளில் ஒன்று, பர்ழான தொழுகைக்கு ஸவாம் கொடுப்பது போன்று ஜனாஸாத் தொழுகையிலும் ஸலாம் கொடுப்பதாகும்.

(பைஹகி - ஸனதுஹு ஸஹீஹ் - அஹ்காமுல் ஜனாஇஸ்)

12. ஜனாஸாத் தொழுகையை பள்ளிவாயிலிலும் நடாத்தலாம்

நபி (ஸல்) அவர்கள் “பைழாவின்” இரு மகன்மார்களுக்கு ஜனாஸாத் தொழுகை பள்ளியில் நடாத்தினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

13. சூரியன் நடு உச்சியிலிருக்கும் போதும், மறையும் போது, உதிக்கும் போதும் ஜனாஸாத் தொழுகை உட்பட எந்தத் தொழுகையையும் தொழக்கூடாது.

உக்பா ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

மூன்று நேரங்களில் நாங்கள் தொழுவதையும், அதில் எங்களில் மரணித்தவர்களை அடக்கம் செய்வதையும் நபி ﷺ அவர்கள் தடுத்தார்கள். (அவை) சூரியன் உதயமாகி சற்று உயரும் வரையும், சூரியன் நடு உச்சிக்கு வந்து சற்று சாயும் வரையும், சூரியன் சாய்ந்து மறையும் வரையும் (ஆகும்). (முஸ்லிம்)

14. மையவாடியிலும் கப்ருஸ்தானங்களுக்கு மத்தியிலும் ஜனாஸாத் தொழுகை நடாத்துவது தடுக்கப்பட்டுள்ளது.

அ) கப்றுகளுக்கு மத்தியில் ஜனாஸாக்களுக்குத் தொழுகை நடாத்தப்படுவதை நபி ﷺ அவர்கள் தடுத்தார்கள்.

( இப்னுல் அ.்.ராபி “மு.்.ஜம்” என்ற தனது நூலிலும் தபரானி அவ்ஸத் என்ற நூலி லும் இதனை பதிவு செய்துள்ளார். ஸனதுஹூ ஸஹீஹ் - அஹ்காமுல் ஜனாயிஸ் )

ஆ) “அடக்கஸ்தலமும் குளியலறையும் தவிர பூமி முழுவதுமே ஸுஜூது செய்யப்படும் இடமாகும்” என நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூஸயீத் ؓ அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

( அபூதாவூத், தர்மிதி )

இ) குப்பைத் தொட்டில், மிருகங்கள் அறுக்கும் இடம், அடக்கஸ்தளம், மக்கள் நடமாடும் பாதை, குளியலறை, ஒட்டகம் தங்குமிடங்கள், கஃபாவிற்கு மேல் ஆகிய 7 இடங்களில் தொழப்படுவதை நபி ﷺ அவர்கள் தடுத்ததாக இப்னு உமர் ؓ அவர்கள் அறிவிக்கின்றார்கள். ( இப்னுமாஜா - இர்வாஉல் கலீல் )

15. ஒரு பெண் ஜனாஸாவிற்கும் சிறு குழந்தையின் ஜனாஸாவிற்கும் ஒன்றாக தொழுகை நடாத்துவதாயின் முதலில் குழந்தையையும், அதற்குப் பின்னால் பெண் ஜனாஸாவையும் வைக்க வேண்டும்.

அம்மார் ؓ அவர்கள் கூறுகின்றார்கள் :

ஒரு குழந்தையின் ஜனாஸாவும், ஒரு பெண்ணின் ஜனாஸாவும கொண்டுவரப்பட்டன. மக்களுக்கு முன்னால் குழந்தை வைக்கப்பட்டது. அதற்குப் பின்னால் அந்தப் பெண் ஜனாஸா வைக்கப்பட்டு, இருவருக்கும் தொழுகை நடாத்தினார்கள். (அந்த சந்தர்ப்பத்தில் நபித் தோழர்களும் இருந்தனர்.) இது பற்றி நான் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது, “இது ஸுன்னத்” எனக் கூறினார்கள்.

(நஸாஈ, அபூதாவூத் பட்டியலிலுள்ள அறிவிப்பாளர்கள் அனைவரும் நம்பகமானவர்கள். ஸனதுஹு ஸஹீஹ். - அஹ்காமுல் ஜனாஇஸ் )

16. குழந்தை குறைமாதத்தில் மரணித்துப் பிறந்தால் அதற்கு ஜனாஸாத் தொழுகை நடாத்த வேண்டும். அதில் அக்குழந்தையின் பெற்றோருக்கு (முஸ்லிமாக இருந்தால்) பாவமன்னிப்பையும் ஆரோக்கியத்தையும் ரஹ்மத்தையும் வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

குறைமாதக் குழந்தை இறந்து பிறந்தால் அதற்கு தொழுகை நடாத்த வேண்டும். அதன் பெற்றோருக்கு அருளையும் மன்னிப்பையும் கோர வேண்டும்.

**யா அல்லாஹ்! குழந்தையின் பெற்றோருக்கு மன்னிப்பளிப்பாயாக! அவர்களுக்கு ஆரோக்கியத்தை வழங்குவாயாக! அவர்களுக்கு அருள் புரிவாயாக!**

(அஹ்மத். புலூகுல் அமானி - இமாம் தகபியும் ஹாகிமும் இதை ஸஹீஹ் என்கின்றனர். ஹாகிமில் “ஆரோக்கியம்” என்ற வாசகமும் வந்துள்ளது. )

17. திருமணம் முடித்து மானக் கேடான விடயத்தில் ஈடுபட்டு, கல்லெறிந்து கொல்லப்பட்டாலும் அவர்களுக்கும் ஜனாஸாத் தொழுகை நடாத்தப்படும்.

அ) நிச்சயமாக ஒரு பெண் மானக்கேடான விடயத்தில் ஈடுபட்டு, கர்ப்பிணியான நிலையில் நபி ﷺ அவர்களிடத்தில் வந்தாள். (குழந்தை கிடைத்து பால்குடி மறந்ததன் பின்னர்) வந்ததும் “கல்லெறிந்து கொல்லுமாறு” கட்டளையிட்டார்கள். உடனே கல்லெறிந்து கொல்லப்பட்டாள். பிறகு அவளுக்கு ஜனாஸாத் தொழுகை நடாத்தினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

ஆ) நிச்சயமாக ஒரு மனிதர் நபி ﷺ அவர்களிடம் வந்து தான் மானக்கேடான விடயத்தில் ஈடுபட்டு விட்டதாகத் தானாகவே ஏற்றுக் கொண்டார். உடனே அவர் கல்லெறிந்து கொல்லப்பட்டார். பிறகு அவருக்கு நபி ﷺ அவர்கள் தொழுகை நடாத்தினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

18. ஒரு முஸ்லிம், முஸ்லிம்கள் இல்லாத இடத்தில் வபாத்தாகி, அவரின் மரணச் செய்தி முஸ்லிமகளுக்குக் கிடைத்தால், அதே தினத்தில் வழமையாக ஜனாஸாத் தொழுகை நடாத்தும் இடத்தில் அவருக்காகத் தொழுகை நடாத்த வேண்டும்.

அ) நஜ்ஜாசி மன்னர் மரணித்த நாளில் நபி ﷺ அவர்கள், அவருடைய மரணச் செய்தியை அறிவித்து விட்டு, ஸஹாபாக்களை (முஸல்லா) தொழுமிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள் என்று அபூஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கின்றார்கள். (ஸஹீஹுல் புகாரி)

ஆ) நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
“உங்களின் இடமல்லாத இடத்தில் மரணித்த உங்கள் சகோதரருக்காக தொழுங்கள்.”
(அஹ்மத் - புலூகுல் அமானி, இப்னுமாஜா - ஸனதுஹு ஸஹீஹ். இது ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிமின் நிபந்தனைக்கு உட்பட்ட ஹதீஸ்.)